# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, KARAIKUDI.
## C.C. No. 218/2024 PW.1

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | வெங்கடாசலம் | த–பெ /க.பெ. | கருப்பன் செட்டியார் |
| ஊர்: | : | காரைக்குடி | சமயம்: | |
| வயது: | : | 67/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | வங்கி பணி ஓய்வு | மாவட்டம் | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 26.05.2026**

----------------------------------------------------------------------------------

**26.05.2026**

**<u>குறுக்கு விசாரணை</u>**

**1) தற்போது எங்கு வசிக்கிறேன் என்றால் அண்ணாநகர், சென்னை. எத்தனை வருடங்களாக சென்னையில் வசிக்கிறேன் என்றால் கடந்த 20 வருடங்களாக வசிக்கிறேன். எனது மாத பென்சன் தொகை எவ்வளவு என்றால் ரூ.40,000/– ஆகும். எனது வாழ்வாதாரம் எனது பென்சன் தொகையை வைத்துதான் நடைபெறுகிறது என்றால் சரிதான். Athithi garments நிறுவனம் எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் என் நண்பர் மூலமாக தெரியும். அந்த நண்பர் சேது ராஜன் என்றால் சரிதான். சேது ராஜனை எனக்கு எத்தனை வருடங்களாக தெரியும் என்றால் சுமார் 10 வருடங்களாக தெரியும். நான் சேதுராஜனுக்கு பணத் தேவைக்கு பண ஏற்பாடு செய்து தருவேன் என்றாலும், அவர் எனக்க அதே போல் ஏற்பாடு செய்து தருவார் என்றாலும் சரியல்ல. சேதுராஜனுக்கு நான் ரூ.5,00,000/– நிலுவை வைத்துள்ளேன் என்றால் சரியல்ல. . Athithi garments நிறுவனத்தில் நான் ரூ.3,00,000/– முதலீடு செய்திருந்தேன் என்றால் சரிதான். Athithi garments நிறுவனத்திடம் இருந்து ரூ. 1,80,000/– பெற்றுள்ளேன் என்றால் சரிதான். Athithi garments நிறுவனத்தின் மூலமாக எனக்கு ரூ. 1,20,000/–**

வரவேண்டும் என்றால் சரிதான். நிறுவனத்தின் சேர்மேனனா எதிரிக்கு மிகப்பெரிய வாகனவிபத்து ஏற்பட்டது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. விபத்தினால் அவரது தொழிலை சரியாக நடத்த முடியாத காரணத்தினால் எனக்கு ரூ. 1,20,000/- தருவதில் தாமதம் செய்தார் என்றால் சரிதான். அவரது நிறுவனத்திற்கு சென்று பணம் தரவேண்டும் என்று கட்டாயப்படுத்தியதால் தேதி குறிப்பிடாமல், செக்யூரிட்டிக்காக காசோலை கொடுத்தார் என்றால் நினைவில்லை.

2) ம.சா.ஆ.7 வழக்கு காசோலையில் உள்ள தேதிக்கும், எண்ணால் உள்ள மைக்கும் வித்தியாசம் உள்ளதா என்றால் தெரியவில்லை. காசோலை அலுவலகத்தில் வைத்து கொடுக்கப்பட்டதா அல்லது சேதுராஜன் மூலம் கொடுக்கப்பட்டதா என்றால் அலுவலகத்தில் வைத்து கொடுத்தார். எதிரி பணம் தரததால் அதற்கான நான் எதிரியின் தாயாரை மிரட்டினேன் என்றால் சரியல்ல. நான் மிரட்டியதால் சேதுராஜன் மூலமாக எதிரி பணத்தை செட்டில் செய்வதாக எதிரி என்னிடம் கூறினாரா என்றால் இல்லை. 03.03.2026 ல் எதிரி எனக்கு ரூ.1,20,000/- தர தயாராக இருந்தார் என்றாலும் அதை நான் பெற மறுத்தேன் என்றாலும் அவ்வாறு எதுவும் நடக்கவில்லை.எதிரியால் பயணம் செய்ய முடியாததால் அவர் ரூ. 1,20,000/- சேதுராஜன் மூலமாக கொடுக்க தயாராக இருக்கிறார் என்றால் சரியல்ல. எதிரி நேரில் வரவேண்டும் என்பதற்காகத்தான் சேதுரான் மூலமாக கொடுப்பதை நான் பெற மறுக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு வரவேண்டிய தொகை வந்தால் பெற தயாராக இருக்கிறேன்.

சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

VALLIMANALAN S A

Digitally signed by VALLIMANALAN S A
Date: 2026.05.26 17:49:51 -0400

நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம், காரைக்குடி.